மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; இது குறித்த விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. தனிக்கேள்வி எழுப்புவார்களானால் விவரமாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்பானிஷ் அரசாங்கத்தால் தமிழ்நாட்டில் எங்கெங்கே தொழு நோயாளிகள் இருக்கிறார்கள் என்ற ஒரு சர்வே செய்யப்பட்டு, அதிலே சேலம் மாவட்டத்தில் தான் அதிகமாக தொழு நோயாளிகள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு அடுத்ததாக தென்னாற்காடு மாவட்டத்திலும் தொழு நோயாளிகள் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சேலத்தில் முழுவதுமாக தொழு நோய் அகற்றப்பட்டு விட்டது. தென்னாற்காடு மாவட்டத்திலும், 'டானிடா' திட்டத்தின்கீழ் தொழு நோயை ஒழிக்கும் திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறதா அல்லது கொண்டு வரும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் முழுவதுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மேலும் அரசு பரிசீலிக்கும்.

கன்னியாகுமரிக்குக் குடிநீர்த் திட்டம்.

* 6505 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை ;
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க குடிநீர்த் திட்டம் எதுவும் தற்சமயம் ஆய்வில் இல்லை.

1990 ஏப்ரல் 26]

(ஆ) நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்திக்காகவும், கன்னியாகுமரி குடிநீர்த் திட்டத்திற்காகவும் பேச்சிப்பாறை அணையிலிருந்து 670 மில்லியன் கன அடி நீரை ''நீர் பங்கீட்டுக் குழுவிடம்'' எதிர்பார்த்து அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. அதன் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இதன் ஆய்வுப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க நிலத்தடியில் எப்போதும் நீர் இருக்கிறது. அங்கே கிணறுகள் தோண்டி, ஆழ் குழாய்கள் மூலம் கன்னியாகுமரிக்கு கொண்டு சென்று, அதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையில் இருந்துதான் அந்தப் பகுதிக்களுக்காக குடிநீர் கொடுக்க முடியும் என்பதால் பேச்சிப்பாறையிலிருந்து நீரைக் கேட்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு நீர் ஆதாரம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் குடிநீர் வாரியத்தில் இது பற்றி சொல்லிய போது, அதிகாரிகள் அங்கே சென்று அவைகளை ஆய்வில் எடுத்துக் கொண்டு, அதிலே கிடைக்கிற நீர் ஆதாரங்களைத் திரட்டி, அதற்கான திட்டங்களை வகுக்குமாறு ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்கான ஆரம்பப் பணிகள் விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-15 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, கோடைக் காலத்தில், கன்னியாகுமரியில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, எடலாகுடி அருகில் நல்ல தண்ணீர் கிடைப்பதால் அங்குள்ள தண்ணீரை லாரி மூலமாக கொண்டு சென்று கன்னியாகுமரிக்கு தண்ணீர் சப்ளை செய்கின்ற உத்தேசம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பல்வேறு கோரிக்கைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கிற காரணத்தினால் வறட்சி நிலையை அறிந்த பிறகு இது குறித்து அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.